# NFTE தமிழ் மாநில சங்கம்
# மாவட்டச் செயலர்கள் கூட்டம்- விழுப்புரம்

மாவட்டச் செயலர்கள்-அருகாமை மாநில சங்க நிர்வாகிகள் பங்கேற்ற கூட்டம் செப் 29 அன்று விழுப்புரத்தில் ஆக்கபூர்வமான திட்டங்களுடன் சிறப்பாக முடிந்துள்ளது.

மாநிலத்தலைவர் தோழர் தமிழ்மணி தலைமையேற்றார். தோழர் சுந்தரமூர்த்தி , கடலூர் மாவட்ட செயலர் வரவேற்புரை நல்கினார். கூட்டத்தை துவங்கி வைத்து சம்மேளன செயலர் தோழர் ஜெயராமன் கருத்துரை நல்கினார். கோவை மத்திய செயற்குழுவின் முக்கியத்துவம், வர இருக்கின்ற விவாதங்கள் எடுக்கப்படப்போகும் தீர்மானங்கள் ஆகியவை கோவையின் நினைவை பேசுவதாக அமையும் என்று சுட்டிக் காட்டினார்.

கோவை வரவேற்புக்குழுவிலிருந்து தலைவர் அருணா, பொருளர் சுப்பராயன், மாவட்டத் தலைவர் ராபர்ட், செயலர் தனுஷ்கோடி ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றனர். தோழர் அருணாவும் சுப்பராயனும் நடந்து வரும் வேலைகளை விளக்கினர். வரப்போகும் பல்வேறு மாநிலத் தலைவர்களை உபசரிக்க வரவேற்புக்குழு தோழர்கள் ஈடுபாட்டுடன் உழைத்து வருவதை தெரிவித்தனர். அக் 15 முதல் நாள் சிஎம்டி பங்கேற்கும் கருத்தரங்கம், மதியம் தொழிற்சங்க தலைவர்கள் பங்கேற்கும் பொது அரங்கு ஆகியவற்றில் ஆயிரம் தோழர்களையும் உபசரிக்க பெரும் ஏற்பாடுகள் நடப்பதை தோழர்கள் உற்சாகத்துடன் தெரிவித்தனர். நன்கொடையை மாவட்டங்கள் காலத்துடன் அனுப்புமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

மாவட்டங்களிலிருந்து வந்திருந்த தோழர்கள் வேலூர் அல்லிராஜா, சிவில்/சிஜிஎம் ஆறுமுகம், தூத்துக்குடி பாலகண்ணன், திருச்சி பழனியப்பன், சேலம் பாலு ,புதுச்சேரி காமராஜ், குடந்தை பாஸ்கர், குன்னூர் ராமசாமி, கடலூர் சுந்தரமூர்த்தி,காரைக்குடி மாரி, நெல்லை ராமகிருஷ்ணன், ஈரோடு பங்காரு, தர்மபுரி மணி , கோவை தனுஷ்கோடி மாநில சங்க நிர்வாகிகள் அசோக்ராஜ், முனியன், மணி, ஸ்ரீதர், சென்னகேசவன் ஆகியோர் மத்தியசெயற்குழுவை சிறப்பாக நடத்துவதற்குரிய ஆலோசனைகளை தந்தனர். தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிதனையும் தருவதற்கு உறுதி அளித்தனர். வி ஆர் எஸ், ஜேஏசி –ஒன்றுபட்ட தொழிற்சங்க போராட்டங்கள் ஆகியவை குறித்து தங்கள் கருத்துக்களை/ அனுபவங்களை தோழர்கள் பகிர்ந்து கொண்டனர். மூத்த தோழர் சேது பல்வேறு மாநாடுகளை/மத்திய செயற்குழு நடத்தப்பட்ட அனுபவங்களை பகிர்ந்துகொண்டார். தோழர் அன்பழகன் முழுமையாக கூட்டக் குறிப்புகளை பதிவு செய்தார்.

மாநில செயலர் தோழர்கள் தெரிவித்த பல்வேறு கருத்துகளுக்கு நமது சங்கம் எடுத்து வரும் நிலைப்பாட்டினை விளக்கிப் பேசினார். மத்திய சங்க செயற்குழுவில் பல்வேறு பிரச்சனைகளும் உரிய கவனத்துடன் விவாதிக்கப்படும் என்றார். மாவட்டங்களிடம் எதிர்பார்க்கக் கூடிய நிதி விவரங்களை வெளியிட்டு வருகிற அக்டோபர் 7க்குள் வரவேற்புக்குழுவிடம் ஒப்படைக்க வேண்டுகோள் விடுத்தார். வரவேற்புக்குழு தோழர்கள் சமாளிக்கும் அளவிற்கு உட்பட்டு தோழர்கள் திரள வேண்டுகோள் விடுத்தார். விழுப்புரம் தோழர் கணேசன் நன்றியுடன் கூட்டம் முடிக்கப்பட்டது.

ஈரோடு ரூ10,000, தூத்துக்குடி 10,000 , கடலூர் 10,000 , வேலூர் 6000, தர்மபுரி 5000, திருச்சி 5000, சேலம் 5000, குன்னூர் 3000, சிவில் 3000, நெல்லை 3000 என வரவேற்புக்குழு தலைவர்- பொருளரிடம் தோழர்கள் நிதியை ஒப்படைத்தனர்.

கடலூர், வேலூர், தஞ்சை,சேலம், திருச்சி, மதுரை ஆகியவை 25000, நெல்லை,சிவில்-சிஜிஎம்,விருதுநகர்,பாண்டி,குடந்தை 10000, குன்னூர், நாகர்கோவில்,காரைக்குடி 5000 என்ற இலக்கை நிறைவு செய்ய கோரியுள்ளோம்.
முதல் நாள் நிகழ்விற்கு ரூ50 , மூன்று நாட்களுக்கும் 300 என சார்பாளர் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கூட்ட ஏற்பாடுகளை சிறப்பாக செய்த கடலூர் மாவட்ட சங்கம்- விழுப்புரம் கிளை சங்கத்திற்கு நமது பாராட்டுதல்கள். மத்திய செயற்குழு சிறக்க கவனம் குவிப்போம்.

30-9-11

DA உயர்வு 4.8 % 1-10-2011 முதல் DA 52 சதவீதம்

அஞ்சல் போனஸ் 60 நாட்கள்
இரயிவே போனஸ் 78 நாட்கள்